உடனுதவும் 17-9-1991 பகுதி

# புலிகள் இராணுவத்தை 'ஆணி அடித்தாற்போல்' நகரவிடாது தடுப்பு!

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 யாழ்ப்பாணம் | திருவள்ளுவர் ஆண்டு 2022 செவ்வாய்க்கிழமை | புரட்டாதி 1 | இதழ்: 218 17-9-1991

(கொழும்பு)

மணலாறு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரை முன்னேறவிடாது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல்மேற் கொண்டு வருகின்றனர். இராணுவத்தினர் புலிகள் தரப்பிலிருந்து கடும் தாக்குதல்களை எதிர்கொள்ளவேண்டி

(4ம் பக்கம்பார்க்க)

## இராணுவத்தின்சடலங்களும் ஆயுதங்களும் மீட்பு!

(யாழ்ப்பாணம்)

மணலாறு நித்திகைக்குளம் காட்டுப்பகுதியில் நேற்றுமுன் தினம் இடம்பெற்றமோதலில் இருராணுவத்தினரின் உடல்களும் பல ஆயுதங்களும் விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டன.

[4ம் பக்கம் பார்க்க]

## நேரடித் தாக்குதல்

[கொழும்பு]

மணலாறு பகுதியில் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினர் புலிகளின் கடும் எதிர்ப்பினால் திண்டாடிவருவதாக கொழும்பின் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவம் நகர்ந்து செல்

(4-ம் பக்கம் பார்க்க)

# ★ நாடாளுமன்றத்தை கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்துக்கு சபாநாயகர் தடை விதிப்பு!

## பிரேரணையும் விவாதத்திற்கு வரும்

(கொழும்பு)

ஜனாதிபதி திரு. பிரேமதாசாவிற்கு எதிரான அரசியல் குற்ற விசாரணைப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு விட சபாநாயகர் அனுமதித்துள்ளதுடன் நாடாளுமன்றத்தை கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தையும் அவர் தடை செய்துள்ளார்.

(2-ம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற சிறப்புரிமைகளை ஜனாதிபதி மீறுகிறார்! - லலித்

(கொழும்பு)

சபாநாயகருக்கும் தனக்கு எதிரானவர்களுக்கும் எதிராக ஜனாதிபதி பிரேமதாஸா கொலைப் பயமுறுத்தல்களை மேற்கொள்வதாக திரு லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

மேலும் நாடாளுமன்ற சிறப்புரிமைகளையும் ஜனாதிபதி மீறிவருவதாகவும் இவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதேபோன்ற கருத்துக்களை பல எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தெரிவித்துள்ளனர். இதன் மூலம் தமது அதிகாரத்தை ஜனாதிபதி மீறுவதாகவும் இவர்கள் கூறியுள்ளனர்.

(153)

## 8 எம். பிக்களின் முகமூடி கிழித்தெறியப்படும்! — ஜனாதிபதி

(கொழும்பு)

தமக்கு எதிரான பிரேரணையைக் கொண்டுவந்த எட்டு எம். பி. மார் பற்றிய இரகசியங்களைத் தாம் அம்பலப்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் இவர்கள் பற்றிய முழு உண்மையும் மக்கள் மத்தியில் தெரியவரும். அப்போது மக்களே இவர்கள் யார் என்பதை அறிவார்கள்.

இந்த நிலையில் மக்கள் உண்மை நிலையை அறியும் போது இவர்களை விரட்டியடிப்பார்களென்றும் கூறியுள்ளார்.

(153)

## தியாகி திலீபன் நினைவுக்கூட்டங்கள்

[யாழ்ப்பாணம்]

தியாகி திலீபனின் 4-வது ஆண்டு நினைவு தினக்கூட்டம் இன்று குடாநாட்டின் பல பகுதிகளில் நடைபெறவுள்ளன.

யாழ் இந்துக்கல்லூரி, மண்கும்பான் சிவகாமி அம்மன் ஆலய முன்றல், கெருடாவில் அ. த. க. பாடசாலை, எழுதுமட்டுவாள் மகாவித்தியாலயம் போன்ற இடங்களில் திலீபன் நினைவு தினக்கூட்டங்கள் இன்று நடைபெறவுள்ளது.

## அரசின் நிலைகுறித்து அமைச்சர்கள் ஆராய்வு!

(கொழும்பு)

அரசு தரப்பு எம். பிக்கள் அனைவரையும் எதற்கும் தயாராயிருக்குமாறு அரசு கேட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தலைநகருக்கு வெளியே செல்ல வேண்டாமென்றும் சகல அமைச்சர்களும், எம்.பிக்களும் கேட்கப்பட்டுள்ளனராம்.

அரசின் இன்றைய நிலை பற்றியும் எதிர்கால நிலை பற்றியும் சில முக்கிய அமைச்சர்கள் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி

## 'இந்தியா இல்லத்தில்' எதிரணி எம்.பிக்கள் சந்திப்பு

(கொழும்பு)

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா உட்பட 12 எதிர்க்கட்சி உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலக்கப்பட்ட 8 எம். பிக்களும் மற்றும் பல ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களும் முக்கிய சந்திப்பு ஒன்றைக் கடந்த வாரம் நடத்தியுள்ளனர்.

இச்சந்திப்பு "இந்தியா இல்லத்"தில் சுமார் 2-00 மணி நேரம் நடைபெற்றது.

இந்தியத் தூதரக அதிகாரி ஒருவரின் பிரியாவிடை வைபவம் மேற்படி இல்லத்தில் நடைபெற்றபோது, மேற்படி அரசியல்வாதிகளும் அவ்விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

(சி)

## அரசுடன் வானொலி, தொலைக்காட்சி விவாதத்துக்கு லலித் தயார்

(கொழும்பு)

அரசுத் தரப்பினருடன் நேரடித் தொலைக்காட்சி அல்லது வானொலி விவாதம் நடத்த தாம் தயாராக இருப்பதாக திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

நாட்டில் நாடாளுமன்ற ஆட்சி முறையா அல்லது ஜனாதிபதி ஆட்சி முறையா தேவை என்பது குறித்து இவ்வாறான விவாதத்திற்குத் தமது தரப்பு தயாரென்று அவர் அறிவித்துள்ளார்.

[4ம் பக்கம் பார்க்க]

## இலங்கையின் அரசியல் நெருக்கடி சுவாரஸ்யமானதாம்

(கொழும்பு)

இலங்கையில் தற்போது எழுந்துள்ள அரசியல் நெருக்கடி மிகுந்த சுவாரஸ்யமாக இருப்பதாக இந்தியப் பத்திரிகைகள் சில தெரிவித்துள்ளன.

இந்த நெருக்கடி எப்படித் தீரும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டுமென்றும் அவை கூறியுள்ளன.

ஜனாதிபதிக்கு எதிராக ஒரு மனு சமர்ப்பிக்கப்பட்ட பின் இந்தியப் பத்திரிகைகள் தினமும் அது தொடர்பான செய்திகளை முன்பக்கத்தில் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்துவருவது குறிப்பிடத்தக்கது.

(சி)

## முல்லை. காட்டுப் பகுதியில் புகைமண்டலம்

(கொழும்பு)

முல்லைத்தீவு காட்டுப்பகுதியில் இடம்பெற்றுவரும் மோதலால் காட்டுப்பகுதியை சுற்றி எங்கும் ஒரே புகைமண்டலமாய் காட்சி தருவதாக தெரிவிக்கப்படுகிறது.

4ம் பக்கம் பார்க்க]

## புலிகளின் ஆதரவாளர்கள் 500 பேர் கைது

(சென்னை)

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களெனக் கூறி சுமார் 500 பேர் தமிழகத்திலும் கர்நாடகம், கேரளத்திலும் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளார்களாம்.

[4ம் பக்கம் பார்க்க]

## மிதிவெடியில் இராணுவம் காலிழப்பு!

(திருமலை)

திருமலையில் புலிகளின் மிதிவெடியில் சிக்கி ஒரு இராணுவ சிப்பாய் காலிழந்துள்ளார்.

திருமலையிலுள்ள றக்ககண்டி இராணுவ முகாமிலிருந்து ரோந்துவந்த படையினரே இம் மிதிவெடியில் சிக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

## வரி விளம்பரம்

### தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதை தேவை. இணுவில், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். அண்ணா கோப்பி கடைகளிலும் ஏற்கப்படும். மில்க்வைற், யாழ்ப்பாணம் [ஏ-1582]

இடம்பெயர்ந்திருக்கும் ஒரு உத்தியோகத்தரின் சிறு குடும்பத்திற்கு மானிப்பாய், சுதுமலைப் பகுதியில் அமைதியான இடத்தில் வீடு வாடகைக்குத் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். செ செல்லத்துரை, புதுமதவடி, சந்தை ஒழுங்கை, சுதுமலை வடக்கு, மானிப்பாய். [சி-5361]

### மணமகள் தேவை

யாழ்.இந்து, 29 வயதுடைய 10 வருடங்களாக ஜேர்மனியில் வசித்துவரும் ஜேர்மன் பிராஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை. அழகும், நற்குணமுடைய படித்த 25 வயதுக்குட்பட்ட பெண் ஓரளவு சீதனத்துடன் எதிர்பார்க்கப்படுகிறது. செவ்வாய்க்குற்றமில்லாதவர் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. சி-5358, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். (சி-5358)

### பயிற்சிகள்

ரெலிவிஷன், வீடியோ டெக், றிப்பியறிங், றிவைண்டிங், எலக்றிக்கல் வயறிங், ஏயர்கொண்டிசனிங், Quantity Surveying பயிற்சிகள் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படுகின்றன. ஆரம்பம் 21-09-91. Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை), யாழ்ப்பாணம். (ஏ-1579)

### தவறிவிட்டது

மு. கந்தசாமி, 3ம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை கிழக்கு இல: 361570758 V அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். [சி-5359]

### நிவாரண பொருட்களில் கற்கள்!

வேலணை!

தீவகத்தில் உள்ள மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் நிவாரணக் கொடுப்பனவுப் பொருட்களில் அதிகமாக கல் இருப்பதாக பொதுமக்கள் புகார்களைத் தெரிவித்து வருகின்றனர். (75)

### கல்விக் கண்காட்சி

(நாவற்குழி)

யாழ். மாவட்ட தொலைக் கல்வி ஆசிரிய மாணவர்களினால் நடாத்தப்பட்ட கல்விக் கண்காட்சியை யாழ். இந்து தேசிய கல்லூரி அதிபர் திரு ஏ. பஞ்சலிங்கம் ஆரம்பித்து வைத்தார்.

யாழ். இந்துக்கல்லூரிமண்டபத்தில் நடைபெற்ற இக் கண்காட்சியில் யாழ். மாவட்டத் தொலைக்கல்விப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ம. செ. அலெக்சாந்தர் உட்பட பல விரிவுரையாளர்கள் கலந்துகொண்டனர்.

பொருட்காட்சி முடிவுற்றதும் ஆசிரிய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. இதில் கவிதை அரங்கு, விவாத அரங்கு, தனிப்பாடல் குழுப்பாடல் பொம்மலாட்டம் போன்ற பல நிகழ்ச்சிகள் சிறப்பாக இடம்பெற்றன. (107)

### பவளவிழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாசாலையின் பவளவிழா இன்று செவ்வாய்க்கிழமை முதல் 19ம் திகதிவரை நடைபெறவுள்ளது.

மேற்படி வித்தியாலயத்தின் அதிபர் சு. துரைசிங்கம் தலைமையில் இவ்விழா நடைபெறவுள்ளது. இவ்வைபவத்திற்கு யாழ் பிரதேசகல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்துகொள்கின்றார். (வி)

### மாதாந்த சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீட வேதாந்த மடத்தில் ஒவ்வொரு மாதமும் வருகின்ற பூரணைத்தினத்தன்று பிற்பகல் 3-00 மணிக்கு சொற்பொழிவுகளை நடாத்தக் குருபீடாதிபதி ஒழுங்குகளைச் செய்துள்ளார்.

இம்மாதம் 23ம் திகதி திங்கட்கிழமை, கந்தர்மடம் வேதாந்தமடத்தில் ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள்சுவாமிகள் தலைமையில் "நானே இதற்கு நாயகமே" என்னும் பொருள் பற்றி விரிவுரையாளர் ச விநாயகமூர்த்தி சொற்பொழிவாற்றுவார்.

### அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

1990/ 91 ஆம் கல்வி ஆண்டிற்கு இராமநாதன் நுண்கலைப்பிரிவு

**புதிய மாணவர்களைப் பதிவு செய்தல்**

இராமநாதன் நுண்கலைப் பிரிவிற்கு 1990/ 91 ஆம் கல்வி ஆண்டிற்குத் தெரிவு செய்யப்பட்ட புதிய மாணவர்கள் 1991-10-09 ஆம் திகதி புதன் கிழமை மு. ப. 9-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் பதிவு செய்து கொள்ளலாம். தெரிவு செய்யப்பட்டவர்களது சொந்த முகவரிக்குப் பதிவு செய்தல் பற்றிய கடிதங்கள் அனுப்பப் பட்டுள்ளன.

பதிவு செய்வதற்குப் பின்வரும் மூலப் பிரதிகளைக் கொண்டு வருதல் வேண்டும்.

1. பிறப்புச்சான்றிதழ். (முழு அளவிலான)
2. க. பொ. த. [உயர்தர) பரீட்சைச் சான்றிதழ்.
3. வட இலங்கை சங்கீத சபைச் சான்றிதழ் - 4-ம் தரம்.
4. புகைப்பட பிரதிகள் 08, (பாஸ்போட் அளவு)
5. தேசிய அடையாள அட்டை.

பதிவுக்கட்டணம் ரூபா 110/-

பதிவாளர்.

12-09-91. (எ-1580)

### புனர்வாழ்வு நிறுவன நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் மட்டும் 6 லட்சத்து 66 ஆயிரத்து 450 ரூபா 50 சதத்தை நிவாரணவாக வழங்கியுள்ளது.

இத்தகவலை மேற்படி நிறுவனத்தின் உபதலைவர் திரு அ. நல்லதம்பி வெளியிட்டுள்ளார்

நிவாரணமாகவும் கடனாகவும் 5 லட்சத்து 64 ஆயிரத்து 760 ரூபாவையும் புனர்வாழ்வுக்காக ஒரு லட்சத்து ஆயிரத்து 690 ரூபாவையும் வழங்கியுள்ளது. (வி)

### பொதுக்கூட்டம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் சிக்கன சேமிப்பு கடனுதவிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை 18ம் திகதி புதன்கிழமையன்று நடைபெறவுள்ளது. (72)

### இடம்பெயர்ந்த மாணவர் பட்டியல்

(கொழும்புத்துறை)

இருபாலை தமிழ் மாமன்றம் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல சனசமூகநிலையங்களும் தமது பிரதேசத்தில் உள்ள இடம் பெயர்ந்த மாணவர்கள் சிறுவர்கள் ஆகியோரின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றைத் தயாரித்து இம் மாதம் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன் பொதுச்செயலாளர், தமிழ்மாமன்றம் செல்வச் செந்நில் வீதி, இருபாலை, கோப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (154)

### அறிவித்தல்

யாழ். பல்கலைக் கழகம், இலங்கை

பட்டப்பின் கல்வி டிப்ளோமா/ முதுகலைத் தத்துவமாணி தகுதிகாண் பரீட்சை

**அனுமதி அட்டை - 1990**

14-11-91 இல் ஆரம்பமாகவுள்ள பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதி I, II பரீட்சார்த்திகளுக்கும், மீள்பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை அனுமதி அட்டைகள் அவர்களது சொந்த முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளன. முதுகலைமாணி தகுதிகாண் தேர்வு பரீட்சார்த்திகள் தங்களது பரீட்சை அனுமதி அட்டைகளை நேரில் வந்து தேர்வுக்கிளையில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

பதிவாளர்.

12-09-91 [எ-1581]

### ஜனாதிபதிக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக சபாநாயகர் ஜனாப் எம். எச். முகமட் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அக்கடிதத்திலேயே அவர் தமது முடிவை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராக மனு ஒன்று சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து ஜனாதிபதி தனது விசேட அதிகாரத்தை பயன்படுத்தி நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

நாடாளுமன்றம் மீண்டும் ஆரம்பிக்கப்படும்போது எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் குறித்து நிகழ்ச்சி நிரலில் அல்லது ஒழுங்குப் புத்தகத்தில் அதுபற்றி குறிப்பிட வேண்டுமென்பது சட்டம்.

ஆனால் ஜனாதிபதிக்கு எதிரான மனுவை பாராளுமன்றம் மீண்டும் கூடும்போது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதை மேற்படி இரு குறிப்பிலும் பதிய சபாநாயகர் தவறிவிட்டார்.

இதையடுத்து சபாநாயகரின் தவறால் தமக்கு எதிரான பிரேரணை காலாவதியாகிவிட்டதாகவும், இந்தப்பிரேரணையை பாராளுமன்றம் மீண்டும் கூடும்போது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள இயலாதென்றும் பாராளுமன்றைக் கலைக்கக்கூடிய அதிகாரம் தமக்கு உண்டென்றும் ஜனாதிபதி பிரேமதாஸா சட்டமா அதிபரின் ஆலோசனையையடுத்து சபாநாயகருக்குகடிதம் ஒன்றை அனுப்பினர். (இறுதிமுடிவு சபாநாயகரை பொறுத்ததே என சட்டமா அதிபர் குறிப்பிட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது).

இதற்கு பதிலளித்து சபாநாயகர் ஜனாதிபதிக்கு நேற்றுமுன்தினம் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அக்கடிதத்திலேயே மேற்கண்டவாறு பாராளுமன்றம் 24 திகதிகூடும்போது பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும் பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைப்பது தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். [சி]

### தியாகத் தீ-3

மூன்றாம் நாளில்
முற்றியது; யாகத்தீ...
ஊன்றிய புரட்சியின்
உயிர்வான வித்துக்கள்...
தோன்றிய இடமெங்கும்
தொகையாய்
முளைத்தன!

- வாஞ்சிநாதன்.

### ஊரெழுவில்

(பண்டத்தரிப்பு)

திலீபனின் சொந்த ஊரான ஊரெழுவிலும் ஆலயங்களில் விசேட வழிபாடுகள், கருத்தரங்குகள், பொதுப்பணிகள் ஆகியவற்றுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



(யாழ். கோட்டை முற்றுகையின்போது, நேரடி மோதலில் வீரமரணம்)

### லெப். ரேகா

[சங்கரப்பிள்ளை சுசிலா]

(மோகனதாஸ், மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி)

பிறப்பு: 18-09-1972 வீரமரணம்: 17-09-1990

இந்த மலர்...............
சொந்த மண்ணுக்கு உரமாகி
ஓராண்டாகி விட்டதா!...
ஒரு கணப்பொழுதாகி மறைந்தது காலம்
இவள் மொட்டவிழ்ந்து
மலராகத்தான் இருந்தாள்...
இந்திய ஆக்கிரமிப்புப் படையின் வருகை...
இவளை......
மரபு முள் 'அக்கில்' வேலிகளை உடைத்து
பூகம்பமாய்... எரிமலையாய்...
இயக்கத்தில் இணையவைத்தது
இந்தியக் காந்தியே கண்ணீர் சிந்த
திலீபன் உயிர் குடித்த
அந்நியப் படை போயொழிந்தது
மீண்டும் போர்மேகம் கருக்கொண்டது
சிங்கள இனவெறிக் கூலிப்படை
தமிழீழத்தில்... தமிழரின்...
இரத்தத்தை மழை நீராக்கியது
திலீபனின் கனவு நனவாக்கப்பட
புலிப்படை கோட்டையைச்சுற்றி
ஒரு வேலியைப் போட்டது
வேலியின் கதியாளாக...
ரேகாவும் அங்கே நின்றாள்
கோட்டையில் புலிக்கொடி
ஏறியபோது...
இந்த மலர் அங்கு இல்லை
இவள்...
அங்கு விதைக்கப்பட்டு விட்டாள்
முளைகொண்ட ஆயிரம் ஆயிரம் உயிர்களாய்
இன்று...
கையில் சுடுகலனுடன்
பூகம்பமாய்... எரிமலையாய்...
இவள் கனவு நனவாகும்
தமிழீழம் நிச்சயம் பிறக்கும்.

பெற்றோர், உறவினர், நண்பர்கள்,

(சி-5354)

## மக்களை போராட்டத்தில் இணைக்க

# 'இனியொருவிதி' போன்ற குறும்படங்கள் வெளிவரவேண்டும்

(யாழ்ப்பாணம்)

''இனியொரு விதி'' என்ற குறும்படம் புதுவகை அனுபவத்தைத் தருகிறது. சிற்சில இடங்களில் விசேட தன்மை பொருந்தியுள்ளது.''

இவ்வாறு நிதர்சனம் செயலகத்திலுள்ள அமலன் அரங்கில் இடம்பெற்ற 'இனியொரு விதி' என்ற குறும்பட வெளியீட்டு விழாவில் பேராசிரியர் சிவத்தம்பி குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், திரைப்படம் என்பது ஒரு கட்புல சாதனமாகும். கமராவினால் கலாபூர்வமாக இயக்கப்படும் முறையில் கண்களால் பார்க்கப்படுகிறது.

அதில் குறும்படம் என்பது சின்னக் கவிதைக்குரிய பண்புகள் போன்றது கவிதை தொடங்குவது போலவும் முடிவது போலவும் இருக்க வேண்டும். பிரதான சினிமாவின் மாற்று வடிவம்.

இந்தக் குறும்படத்தில் சுடுபட்ட பெண் தண்ணீர் கேட்பதும் அவளை இராணுவத்தினர் காலால் தட்டித் தள்ளுவதும் பாராட்டப்பட வேண்டிய கட்டங்களாகும் என்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத் தலைவர் புதுவை இரத்தினதுரை 'இனியொரு விதி' குறும்பட வெளியீட்டில் கூறியதாவது;

மக்களைப் போராட்டத்தில் ஒன்றிணைப்பதற்கு 'இனியொரு விதி' போன்ற குறும்படங்கள் வெளிவர வேண்டும். ஆனையிறவு யுத்தத்தை பல போராளிகள் கமராமூலம் கொண்டு வந்தார்கள். அவைகள் விவரணப் படங்களாகத்தான் இருக்கும்.

இப்படியான குறும்படங்கள் பல வெளிவர வேண்டும். இந்தப்படம் ஒரு சில நிகழ்வுகளைப் பிரதிபலிப்பதாக உள்ளது. இப்படியான பல நிகழ்வுகள் எம்மிடம் உள்ளன.

மாங்குளம் முகாம் தகர்ப்பில் வீரமரணமெய்திய 'போர்க்' கூறிய கடைசி வசனத்தில் இருந்தே ஒரு நீண்ட திரைப்படத்தைத் தயாரிக்கலாம் என்றார். (152)

## ஊர்காவற்றுறை ப. நோ. கூ. ச.

# மக்கள் கடையில் பால்மாவகை திருட்டு!

(வேலணை)

யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்திற்கு முன்பாக இயங்கி வந்த ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான 'மக்கள் கடையில்' இருந்து கடந்த 14ம் திகதி இரவு ஒரு லட்சம் ரூபாவுக்கு மேலான பால் மாவகைகள் திருடப்பட்டுள்ளன தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக லக்ஸ்பிறே, மற்றும் குழந்தைகளுக்கான பால் மாவகைகளுமே அதிகளவு திருடப்பட்டுள்ளதாம். (57)

## இராசி பலன்

17 - 09 1991

செவ்வாய்க்கிழமை

தமிழுக்கு புரட்டாதி 1

நவமி மு. இ 8-18 வரை, மூலம்மு.ப.10-52வரை இராகு காலம் மாலை 3-03 முதல் 4-33 வரை, சுபநேரம் காலை 10-33 முதல் 12-03 வரை. அமிர்தசித்தயோகம்.

மேடம்: வாழ்க்கையில் விரக்தி, வைராக்கியம், காரிய தாமதம்.

இடபம்: ஜீவன பகை, சோம்பேறித்தனம், உடல்பிணி.

மிதுனம்: சுகபோகம், வருவாய் அதிகரிப்பு, தந்தையார் ஆதரவு.

கடகம்: தானதர்மம், செல்வாக்கு, தொழில் முன்னேற்றம்.

சிங்கம்: கடன் பிணி, குடும்ப பாரம், தெய்வபக்தி

கன்னி: ஆனடிமை, பிரிந்தவர் தொல்லை, உடல்நோய்.

துலாம்: களத்திரபாக்கியம், செல்வ சேர்க்கை, குடும்ப நன்மை.

விருச்சிகம்: கைகால் பிடிப்பு குடும்பக் கஷ்டம், மனக்குறை.

தனுசு: வெற்றி வாய்ப்பு, தலைமைப்பதவி, இனசன உதவி

மகரம்: பணியாளர் வஞ்சம், படபடப்பு, தொழில நஷ்டம்.

கும்பம்: மனைவியின் சர்வாதிகாரம், தனிக்குடித்தனம், வேதனை.

மீனம்: பௌத்திர சிறப்பு, விரோதம், கல்வி விருத்தி.

ஜோஸ்யர்

## உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

'இ' அட்டை உடையவர்களுக்கு செப்டம்பர் மாதத்திற்குரிய ஒருவார உலர் உணவு விநியோகம் தெல்லிப்பழை ப. நோ. கூ சங்க கிளைகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. 22ம் திகதிக்கு முன் இதனை பெற்றுக்கொள்ளுமாறு பாவனையாளர்கள் வேண்டப்படுகின்றனர். ''அ'' ''உ'' உலர் உணவு அட்டைகளுக்குரியவர்கள் தங்களுக்குரிய நிவாரணப் பொருட்களையும் குறிப்பிடப்பட்ட காலத்தினுள் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

## விசேட கலந்துரையாடல்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பகுதியிலுள்ள அனைத்து சிற்றாரவை உறுப்பினர்களுக்கும் விசேட கலந்துரையாடல் ஒன்று புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

தீவக நிர்வாக அரசியல் பொறுப்பாளர் திரு. சுதா தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது மக்கள் கொள்கை முன்னெடுப்பு பிரிவு தீவுப்பகுதி பொறுப்பாளர் திரு ப. கனகலிங்கம், புங்குடுதீவு பிரதேச பொறுப்பாளர் திரு. யோகின், மற்றும் கலை பண்பாட்டுக் கழக தீவக பொறுப்பாளர் நிரூச் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வருடாந்த பொதுக்கூட்டம்

(வேலணை)

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்தப்பொதுக்கூட்டம் அடுத்த மாதம் 27-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆலயத்தில் அறங்காவலர் சபைத் தலைவர் திரு. நா. ஜெகநாதன் தலைமையில் நடைபெறவிருக்கின்றது. (75)

## மக்கள் அஞ்சலி

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறையைச் சேர்ந்த மாவீரன் குகனேஸ்வரன் (ஜெயக்கிளி ஜெகநாதன்) உருவப்படம் இணுவில் பிரதான வீதியில் அடைக்கப்பட்டு திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டபோது மக்கள் அஞ்சலி செலுத்தினர். (86)

## இடமாற்றம்

(அச்சுவேலி)

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றிய புகையிரத தலைமை அதிபர்கள் (செற்காட்) எட்டுப்பேரும் இம்மாதம் தொடக்கம் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

காங்கேசன்துறை புகையிரத நிலையத்தில் இருந்து சேவை ஆற்றிய எட்டு புகையிரத தலைமை அதிபர்களில் 7 பேர் மருதானைக்கும் ஒருவர் திருகோணமலைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## சிகிச்சை நிலையங்கள்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாயில் இயங்கிவந்த தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலையின் சிகிச்சை நிலையங்கள் (கிளினிக்குகள்) தற்போது சங்கானை அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்று வருகின்றன.

இவ்வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு முற்றாக மூடப்பட்டது தெரிந்ததே. (72)

## இந்தியா திரும்பினர்

(புதுடில்லி)

ராஜீவ் கொலை தொடர்பாக விசாரணை நடாத்த கொழும்பு வந்த விஷேட புலனாய்வுக்குழுவினர் கடந்த சனிக்கிழமை நாடு திரும்பினர் இவர்கள் இங்கு தங்கியிருந்தபோது இராணுவ, பொலிஸ் அதிகாரிகளை சந்தித்து புலிகள் தொடர்பான தகவல்களை பெற்றுள்ளனராம்.

## தியாகி திலீபன் நினைவுநாள் நிகழ்ச்சிகள்

தியாகி திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு தெருக்களெல்லாம் மூலைமுடுக்குகளெல்லாம் அஞ்சலி நிகழ்வுகள், பொதுநலப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

★

**மல்லாகத்தில்**

மல்லாகம் சந்தியில் அலங்கரிக்கப்பட்ட பந்தலில் திலீபனின் படம் வைக்கப்பட்டு அஞ்சலி செய்யப்படுகிறது

மல்லாகம் சந்தியில் ஒவ்வொரு வளைவிலும் சிகரங்களும், மாலைகளும் கட்டப்பட்ட திலீபனின் படத்திற்கு அஞ்சலி செய்யப்படுகிறது.

★

**ஆனைக்கோட்டையில்**

இம்மாதம் 25ம் திகதி புதன்கிழமையன்று மாலை ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டரங்கிலும் திலீபன் நினைவு பொதுக்கூட்டம் நடைபெறுமென்று தெரிவிக்கப்படுகின்றது. (72)

**இணுவிலில்**

மருதனமடம் இணுவில் பகுதிகளிலும் அலங்கார பந்தல்கள் அமைக்கப்பட்டு திலீபனின் படம் வைக்கப்பட்டுள்ளது.

இதைவிட சிறிய ஒழுங்கைகள், குறுக்கு வீதிகள் தோறும் சிறுசிறு பந்தல்கள் அமைக்கப்பட்டு திலீபனின் படங்கள் வைக்கப்பட்டுள்ளன

சுன்னாகம் பொதுநூல் நிலையத்திற்கு முன்பாகவுள்ள வெள்ள வாய்க்கால் அப்பகுதி மக்களால் சிரமதானம்மூலம் செப்பனிடப்படுகிறது.

★

**சிரமதானம்**

பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கம் தியாகி திலீபனின் 4வது நினைவைமுன்னிட்டு பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் சிரமதான மொன்றை மேற்கொள்வது என்று தீர்மானித்துள்ளது.

இதேவேளை பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை, இளவாலை ஆகிய இடங்களில் சந்திகள் தோறும் திலீபனின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டுவருகின்றது.

★

**பொதுக்கூட்டம்**

தியாகி திலீபனின் நினைவு தினப் பொதுக்கூட்டம் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இம்மாதம் 20ம் திகதி வெள்ளிக்கிழமையன்று மாலை நடைபெறவுள்ளது இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்க முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு உரைநிகழ்த்துவார்கள்.

## அமெரிக்க, இலங்கை மிஷனின் 175வது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்கள்

எம் மக்கள் மத்தியில் சேவை புரிந்து வரும் அமெரிக்க இலங்கை மிஷனின் (தற்போதைய யாழ். தென்னிந்திய திருச்சபையின்) 175 ஆண்டுகள் நிறைவைக் குறிக்கும் வகையில் பின்வரும் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

1. செப்டம்பர் 20-ம் திகதி வெள்ளி

"கொடிதினம்"

இது முன்னைய மற்றும் தற்போதைய அமெரிக்கன் மிஷன் பாடசாலைகள், ஸ்தாபனங்கள் ஆகியவற்றில் நடைபெறும்.

2. செப்டம்பர் 21-ம் திகதி - சனி

காலை 8.30 மணி — சிறப்பு வழிபாடு, உடுவில் தென்னிந்திய திருச்சபையில்

காலை 10.30 மணி — சிறப்புக் கலை நிகழ்ச்சிகள் உடுவில் மகளிர் கல்லூரியில்

மாலை 2.30 மணி — தெல்லிப்பழையிலுள்ள மிஷனரிமாரின் கல்லறையில் மலர் வளையம் வைத்தல்

மாலை 4.00 மணி — இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் புதியவிடுதிக் கட்டிட திறப்பு வைபவமும் பொதுக்கூட்டமும் கிறிஸ்தவ இறையியல் கல்லூரி மருதனமடம், சுன்னாகம்.

3, செப்டம்பர் 22-ம் திகதி ஞாயிறு

சிறப்புவழிபாடும், சிறப்புநிகழ்ச்சிகளும் இது சகல யாழ். தென்னிந்திய திருச்சபைகளிலும் இடம்பெறும்.

4. செப்டம்பர் 23ந் திகதி திங்கள்

யாழ். தென்னிந்திய திருச்சபை வட்டுக்கோட்டை ஆசன ஆலயத்தில்.

காலை 8-30 மணி — நன்றி செலுத்தும் திருவிருந்தாராதனை.

காலை 11-00 மணி — மிஷன் கூட்டமும் கலைநிகழ்ச்சிகளும்.

மாலை 2-30 மணி — பொதுக்கூட்டம். (இதில் உள்ளூர், வெளிநாட்டு பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள்)

அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் அனைவரும் அழைக்கப்படுகின்றீர்கள்.

அருள்திரு: அ. ஜெயக்குமாரன்
செயலாளர்
யாழ். தென்னிந்திய திருச்சபை

(சி.5363)

## யாழ் நகரில்

# விற்பனைத் திணைக்களம் நாளை மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் மத்தியில் முன்னர் இயங்கிவந்த விற்பனைத் திணைக்களம் நாளை முதல் மீண்டும் இயங்கவுள்ளது.

யாழ். பஸ் நிலையத்தின் முன்பாக கடந்த காலங்களில் இயங்கிவந்த விற்பனைத்திணைக்கழகத்தின் கிளை மீண்டும் இயங்குமென சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேற்படி கிளையில் நிதான விலையில் சகல உணவுப் பொருட்களும் விற்பனை செய்யப்படுமெனவும் கூறப்படுகின்றது. (வி)

தமிழீழ விடுதலைப் போராட்டமானது

# பல கல்விமான்களிடத்தில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் போராட்டமானது தமிழீழ கல்விமான்களின் மன அரங்கில் புரட்சியை ஏற்படுத்த தொடங்கியுள்ளது என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு கோ. மகேந்திரராசா (மாத்தயா) தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நேற்று நடைபெற்ற 'தமிழீழ நோக்கு' ஆய்வு சஞ்சிகை வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது:

ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், துறைசார்ந்த நிபுணர்கள், நிருவாக அதிகாரிகள் என்று பல மட்டங்களிலும் இந்த மாற்றங்களின் தாக்கங்கள் இன்று உணரப்படுகின்றன.

மன அரங்கில் நடைபெறும் இப்பிரளயமான எமது 'தேசியம்' தொடர்பான புதிய பார்வைகளையும், புரட்சிகரமான சிந்தனைகளையும் இவர்களுக்கு வழங்கத் தொடங்கி இருக்கின்றது.

எமது நிலம், மொழி, பண்பாடு, வரலாறு தொடர்பான சுருதியிலே புதிய விழிப்புணர்வுகள் தோற்றம் பெறத் தொடங்குகின்றன.

இவைகள் தொடர்பான ஆழமான ஆய்வுகள் நடாத்தப்பட்டு மேலும் தேசியம் வளர்த்துச் செல்லப்பட்டு, பலப்படுத்தப்படவேண்டும் என்ற அவசியமும் உணரப்பட்டுள்ளது.

உண்மையில் இது தமிழீழக் கல்விமான்கள் மாற்றத்தின் ஆரம்பமாகும்.

''தமிழீழ நோக்கு'' என்ற இந்த ஆய்வுச்சஞ்சிகையும் அத்தகைய மாற்றத்தின் குழந்தையாக என்று கூறினால் அது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன். (152)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரிவு தமிழீழ ஆரம்பநீதிமன்றத் திறப்பு விழா இன்று காலை 10-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

## வீர வணக்கம்

(யாழ்ப்பாணம்)

மணலாறு மாவட்டத்தில் முல்லைநகர 15ம் திகதி இடம் பெற்ற மோதலில் வீர மரணத்தைத் தழுவிக்கொண்டவர்கள் விபரம்: வில்லியம் (இராஜகோபால் விவேகானந்தன்) மூதூர், மலர்விழி (கிருபாதேவி மயில்வாகனம்) மூதூர், பரந்தாமன் (அருணானந்தம்) தாவடி, ஜெகன் (ஜெயநாதன் ஜெரோம்) யாழ்ப்பாணம்) ஆகியோருக்கும், இம்மாதம் 10ந் திகதி வீர மரணமடைந்த வீர வேங்கைகளான ஜான் (திருநாவுக்கரசு சாந்தகுமார்) தொண்டமானாறு, வாகீசன் (செல்லையா தயாளன்) கரவெட்டி, ரஞ்சன் (செல்லத்துரை ரவிச்சந்திரன்) தாளையடி ஆகியோருக்கும் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

## பிரிவினைவாதிகள் அப்புறப்படுத்தப்படுவர்

(சென்னை)

இந்தியாவைப் பிளவுபடுத்த எவர் முயன்றாலும், அவர்கள் அடையாளம் காணப்பட்டு அப்புறப்படுத்தப்படுவார்கள் என்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா கூறியுள்ளார்.

அறிஞர் அண்ணாவின் 83வது பிறந்த தின நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்; நாட்டின் ஒருமைப்பாடு தமது அரசின் முக்கியமான குறிக்கோளாகும். மக்களின் விருப்பத்திற்கிணங்க, மத்திய அரசின் கரங்களை பலப்படுத்துவதில் தமது அரசு முன்னிற்கும் என்றார். (சி)

## தொழில்நுட்பவியலாளர் தொடர்ந்து பற்றுக்குறை

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண வைத்தியசாலைகளில் மருத்துவ தொழிற் நுட்ப வியலாளர்கள் பற்றுக்குறை தொடர்ந்து நிலவுகிறது.

கடந்த பல வருடங்களாக மேற்படி வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் தொடர்ந்து வைத்தியசாலைகள் புறக்கணிக்கப்பட்டு வருகிறது.

கதிர்வீச்சுப்படப் பிடிப்பாளர்கள் இயப்பியல் சிகிச்சையாளர்கள், பதிசிகிச்சையாளர்கள். ஆய்வு கூடவியலாளர் ஆகிய பதவிகளுக்கு தமிழர்கள் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக சேர்க்கப்படவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது. (153)

## இராணுவத்தின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரி 56 ரக துப்பாக்கிகள் -2, ரவைக்கூடுகள் - 7, ரி 81 ரக துப்பாக்கி - 1, இதற்குரிய ரவைக்கூடுகள் - 2, எல்.எம் தொடர் ரவைகள் 100, ஏ. கே எல் எம். ஜீ தொடர் ரவைகள் 474, 4 மி. மீ ஷெல் - 6, நடுத்தர ரவைகள் 1,700 ஜே. ஆர் ரக கைக்கைக்குண்டுகள் -6, ஆகிய ஆயுதங்களும் இரு ராணுவத்தினரின் சடலங்களும் புலிகளால் மீட்கப்பட்டன.

இம்மோதலில் புலிகள் தரப்பில் இந்திரன் (இ. பஞ்சலிங்கம் கிளிநொச்சி), மலர்விழி ம. கிருபாதேவி, திருமலை) ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

இவர்களுக்குப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## யாழ். போதனா வைத்தியசாலைக் குழு அமைச்சு அதிகாரிகளை சந்திக்கும்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் சுகாதார அமைச்சு செயலாளர் உட்பட மற்றும் உயரதிகாரிகளைச் சந்தித்துப் பேச யாழ். போதனா வைத்தியசாலை தூதுக்குழு ஒன்று பணிப்பாளர் தலைமையில் செப்டம்பர் மாதம் 25ம் திகதி கொழும்பு செல்லவுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்களின் பிரச்சினைகள் உட்பட மற்றும் பலதரப்பட்ட முக்கிய விடயங்கள் பற்றியும் இந்தக்குழு அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தும் (56)

## முல்லை. காட்டுப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த யுத்தத்தையடுத்து பெருமளவு காட்டு மிருகங்களும் இடம்பெயர்ந்து வேறிடங்களுக்கு செல்கின்றன

கடந்த 18 நாட்களாக இக்காட்டுப் பகுதியில் தொடர்ந்தும் அகோரயுத்தம் இடம்பெற்றவண்ணமிருக்கிறது. (சி)

## புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் புலிகளின் ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டு வருவதாகவும் மேற்படி மாநில அரசுகள் தெரிவித்துள்ளன.

கடந்த சனிக்கிழமை புலிகளுக்கு ஆதரவாக கூட்டம் நடத்த முற்பட்ட 31 பேர் மதுரையில் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## யாருடையது

(யாழ்ப்பாணம்)

யாழ். கஸ்தூரியார் வீதியில் வின்சர் சந்திக்கும் கன்னாதிட்டி சந்திக்குமிடையில் கடந்த சனிக்கிழமை காரைநகரைச் சேர்ந்த கனகசபை தர்மகுலசிங்கம் என்பவரால் கைக்கடிகாரம் ஒன்றும்13-09-91அன்று பிற்பகல் 2-00மணியளவில் பாங்ஷால்வீதியில் திறப்புகோர்வை ஒன்றும் ''தமிழகம்'' முதலுதவி நிலையத்தினரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அடையாளம் காட்டி பெற்றுக்கொள்ளவும்.

## புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விருப்பதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பரவலாகக் கண்ணிவெடிகளை புதைத்து வைத்தும் தனியொருவராக மறைந்திருந்து குறிபார்த்துச் சுட்டும் புலிகள் இராணுவத்தை ஆணி அடித்தாற்போல நகர முடியாமல் தடுத்து வருகிறார்கள்

இதேவேளையில் கொழும்பிலுள்ள ஆஸ்பத்திரிகளில் காயமடைந்த பல இராணுவத்தினர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வடபகுதியில் போரிட்டு வரும் இராணுவத்தில் காயமடைந்த இராணுவத்தினரே ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு செப்ரெம்பர் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Regestered as a News Paper at the General Postoffice Sri Lanka under Licence Number B/10336/81.

வடக்கு - கிழக்கு

## அரசதிணைக்கள சாரதிகள் தென்பகுதிக்கு இடமாற்றம்

(மானிப்பாய்)

வடக்கு கிழக்குப் பகுதிகளில் அரசாங்கத் திணைக்களங்களில் சாரதிகளாக பணிபுரியும் பலர் தென்பகுதிக்குச் சென்று பணிபுரியுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

வடக்கு கிழக்கு மாவட்டங்களிலுள்ள திணைக்களங்களின் பணிபுரியும் சாரதிகள் பலருக்கு இவ் இடமாற்ற உத்தரவு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (71)

## குண்டுவெடித்து எண்மர் காயம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா ஓமந்தை மாணிக்கவளவில் பைஞன்றில் வைக்கப்பட்ட குண்டொன்று வெடித்ததில் எட்டுப் பொதுமக்கள் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை 9-45 மணியளவில் இக்குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

## நாடக விழா ரத்து

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலையை அடுத்து இம்முறை தேசிய நாடகவிழா நடைபெறமாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

கிராமசேவையாளர்கள்

## வெற்றிடங்கள் நிரப்ப 600 விண்ணப்பங்கள்

(சித்தன்கேணி)

யாழ். மாவட்ட கிராம சேவை அலுவலர் பதவி வெற்றிடங்களுக்கு யாழ் அரசாங்க செயலகத்துக்கு இதுவரை சுமார் 600 விண்ணப்பங்கள் ஆண்கள் பெண்கள் இருபாலாரிடமிருந்தும் கிடைத்துள்ளது.

யாழ். அரசாங்க செயலகத்தில் நேற்று பெரும் தொகையானோர் நீண்ட வரிசையில் நின்று ''சிறுப்பரிடம்'' கிராமசேவை அலுவலர் எழுதுவினைஞர் ஆகிய பதவிகளுக்குரிய கட்டணத்தை செலுத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது. (137)

பிலிப்பைன்ஸிலுள்ள

## அமெரிக்க கடற்படைத்தளம் விலக்கிக்கொள்ளப்படும்

[மணிலா]

பிலிப்பைன்ஸில் கடந்த 90 வருடங்களாக இருந்துவரும் அமெரிக்க கடற்படை தளத்தை விலக்கிக்கொள்ள வேண்டும் என பிலிப்பைன்ஸ் நாடாளுமன்ற செனட்சபை தீர்மானித்துள்ளது.

இதன் மூலம் அமெரிக்கத் தளம் மேலும் 10 ஆண்டுகளுக்கு பிலிப்பைன்ஸில் இருக்கலாம் என்று ஜனாதிபதி அக்கியுனோவுக்கும், அமெரிக்காவுக்குமிடையே அண்மையில் கைச்சாத்தான ஒப்பந்தத்தை பிலிப்பைன்ஸ் செனட்சபை நிராகரித்துள்ளது.

23 பேரைக் கொண்ட செனட்சபையில் 12பேர் அமெரிக்க இராணுவத்தளம் இருக்கக்கூடாதெனவாக்களித்ததை அடுத்து இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## அஸாம் மாநிலத்தில் மீண்டும் இராணுவம் குவிப்பு

[புதுடில்லி]

அஸாம மாநிலத்தில் மீண்டும் இராணுவம் அழைக்கப்பட்டு, மாநிலத்தின் பல பகுதிகளிலும் குவிக்கப்பட்டுள்ளது.

'உல்பா' தீவிரவாதிகளுக்கு எதிராகத் தேடுதலையும் ஆரம்பித்துள்ளதாகவும், சிலரைக் கைதுசெய்துள்ளதாகவும், தீவிரவாதிகளுக்கு அரசு வழங்கிய பொதுமன்னிப்பு வாபஸ் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசின் இந்த நடவடிக்கையை பாரதிய ஜனதாக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் கண்டித்துள்ளனது. (சி)

## அரசுடன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசுத் தரப்பு இதனை ஏற்றுக்கொண்டால் எவ்வேளையிலும் விவாதம் நடத்தலாம் எனவும் திரு. லலித் கூறியுள்ளார். (சி)

## நேரடித்தாக்குதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் இடமெல்லாம், புலிகள் கண்ணி வெடிகளைப் புதைத்து வைத்துள்ளதுடன் நேரடித் தாக்குதலையும் நடத்தி வருகிறார்கள்.

இதனால் இம்மோதலில் ஈடுபட்டுவரும் இராணுவத்தினர் புலிகளின் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல் நிலைகுலைந்து வருவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றிரவு இடம்பெற்ற மோதலில் 14 இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## தமிழீழ சித்திர சிற்ப கல்லூரி

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் உருவாக்கவுள்ள ''தமிழீழ சித்திர சிற்பக் கல்லூரி'' சம்பந்தமான கலந்துரையாடல் 19ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

## ஓய்வூதிய பணிக்கொடை

(மானிப்பாய்)

ஓய்வூதியத் திணைக்களத்திலிருந்து ஐந்நூறுக்கு மேற்பட்டவர்களின் ஓய்வூதியப் பணிக்கொடைகள் யாழ் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் கடந்த யூன் மாதத்திற்குரிய றெயில்வே ஊழியரின் பென்சன் வவுச்சர்களும் வந்து சேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (71)